5th November 1965]

* 306 *Q.*—SRI V. SANKARAN :
SRI P. U. SHANMUGAM : { Will the Hon. the Minister for Food be pleased to state :—

(*a*) whether it is a fact that a fire accident took place in Tiruvannamalai on 1st July 1965;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) the extent of damage caused thereby?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) The incident was accidental.

(*c*) The total loss of property as a result of the fire accident is estimated at Rs. 15 lakhs.

திரு. ப. உ. சண்முகம் : திருவண்ணாமலையில் ஏற்பட்ட பெரும் தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட வியாபாரிகள் நீண்ட காலக் கடனுதவி கோரினார்களே, அதற்குச் சர்க்கார் என்ன பதிலளித்தார்கள் ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அவர்கள் தனியாக ஒரு விண்ணப்பமும் அனுப்பவில்லை. ஆனால், அந்தத் தீ விபத்து நிலையைப் பார்க்க நான் போயிருந்தபோது, அந்த ஆலோசனையை அந்தக் கூட்டத்தில் இருந்தவர்கள் தெரிவித்தார்கள். இதற்குத் தனியாக விசேஷமாக அரசாங்கம் கடன் கொடுப்பதை விட, அங்கிருக்கும் கூட்டுறவு சங்கம், கடைகள் கட்டுவதற்கும், வியாபாரத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கும் கடன் கொடுக்கக்கூடிய முறையிலே ஆலோசனை சொல்லி, அதை ஏற்றுக்கொண்டு அந்த முறையிலே கடன் கொடுக்கப்படுகிறது.

நகர் வளர்ச்சித் திட்டங்கள்.

* 307 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) ஒரு லக்ஷத்திற்கும் அதற்கு மேலும் மக்கட் தொகையுள்ள நகரங்களுக்கான வளர்ச்சித் திட்டங்கள் கொடுக்கும்படி திட்டக் கமிஷன் நமது மாநில அரசைக் கோரியதா?

(இ) ஆம் எனில், எந்தெந்த நகரங்களுக்கான வளர்ச்சித் திட்டங்கள் அனுப்பப்பட்டன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) குறிப்பிட்ட நகர் அல்லது மாநகருக்காக எந்தத் திட்டமும் அனுப்பும்படி கேட்கப்படவில்லை. ஆனால், இத் திட்டம் குறித்த கருத்துரைகளை அனுப்பும்படிக் கேட்கப்பட்டது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. து. ப. அழகமுத்து : திட்டக் குழுவினர், ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு மேலுள்ள நகரசபைகளுக்கான திட்டங்களை அனுப்பிவைக்கும்படிக் கேட்டதாகவும், அப்படிக் கேட்டதற்குத்

திட்டங்கள் அனுப்பப்படவில்லை என்றும் திட்டக் குழுவிலே உள்ளவர்கள் கூறியதாகத் தெரிகிறது. அப்படியிருந்தால், அனுப்பாமல் இருந்ததற்கான காரணம் என்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அம்மாதிரியான திட்டங்கள் கேட்கப்படவில்லை. அதற்காகத்தான் அவர்களுக்குப் பதிலளிக்கவில்லை என்று முதல் கேள்விக்குப் பதிலளித்தேன். நகரத்திலும் மற்றப் பஞ்சாயத்துக்களிலும் இருக்கக்கூடிய திட்டங்களை எடுத்து ஒன்றாகச் சேர்த்து, பல துறைகளில் ஒதுக்கப்படுகிற பணத்தை ஒன்று சேர்த்து, அதற்கேற்ற வகையில் திட்டம் வகுக்கும்படி அவர்கள் கேட்டிருந்தார்கள். அதை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே செய்ய இயலாத காரணத்தினால், அதை இப்பொழுது செய்ய இயலாது என்று திட்டக் கமிஷனுக்கும் மத்திய அரசாங்கத்திற்கும் இந்த அரசாங்கம் எடுத்துக் கூறியுள்ளது.

பாரத் சேவக் சமாஜம்

* 308 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** }
திரு. நா. ராஜாங்கம்: } : கனம் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:—

(அ) நமது மாநிலத்தில், பாரத் சேவக் சமாஜத்தின் கிளைகள் எங்கெங்கு இயங்கி வருகின்றன?

(இ) அவைகளின் நோக்கம் என்ன?

(உ) அவைகளுக்கு மாநில அரசாங்கம் நிதி உதவி ஏதேனும் அளித்து வருகிறதா?

(எ) அவைகளின் வருடாந்திரக் கணக்குகள் மாநில அரசாங்கத்தால் தணிக்கை செய்யப்பட்டு வருகின்றனவா?

கனம் திரு. கோ. பூவராகன்: சபைமுன் ஒரு விவர அறிக்கை [a] வைக்கப்பட்டுள்ளது.

திரு. து. ப. அழகமுத்து : இந்த சமாஜத்திற்கு நமது சர்க்கார் இதுவரை எவ்வளவு பணம் கொடுத்திருக்கிறார்கள்? இந்த சமாஜத்தின் கணக்குகள் நமது சர்க்காரால் தணிக்கை செய்யப்பட்டிருந்தால், அந்தத் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளின் விவரம் சபை உறுப்பினர்களுக்குக் கிடைக்கும்படி ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திரு. கோ. பூவராகன் : மொத்தமாக இதுவரை எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டது என்பதற்கான விவரம் இப்பொழுது இல்லை. ஆண்டுதோறும் எவ்வளவு கொடுத்திருக்கிறார்கள் என்பதற்கான விவரம் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு என்னிடம் இருக்கிறது. 1963-64-இல் ரூ. 7,500 கொடுத்திருக்கிறார்கள். 1964-65 இல்

---

[a] 113–114-ம் பக்கங்களில் மூன்றாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.